(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 137.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 நவெம்பர் 23, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1051/ '10

1.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைத் தேசிய கீதம் சிங்கள மொழியில் மாத்திரம் இசைக்கப்படல் வேண்டுமென சட்டம் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இத்தகைய சட்டம் தயாரிக்க ஏதுவான விடயங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தான் விரும்பிய மொழியைப் பாவிக்க அரசியலமைப்பினால் பிரசைகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமை மேற்படி நிலைமையின் கீழ் மீறப்படுவதில்லையா என்பதையும்;

(ii) இதன் காரணமாக சிங்கள மக்களுக்கும் நாட்டின் ஏனைய இனங்களுக்கும் இடையில் உள்ள பரஸ்பர ஈடுபாட்டுக்குத் தாக்கமேற்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1290/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வெலிகம இராஜகுலவடனகம ரஜமகா விஹாரையானது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு தொல்பொருளியல் நினைவுச்சின்னமாகும் என்பதையும்;

(ii) இவ்விஹாரையின் புத்தர் மாளிகை, சுவரோவியங்களுடன் கூடிய சுவர்கள் மற்றும் கூரை பல வருடங்களாக புனரமைக்கபபடாமையினால் அழிந்து வருவதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தொல்பொருளியல் பெறுமதிமிக்க இவ்விஹாரையை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1381/ '11

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 பெப்ருவரி 19 மற்றும் ஏப்ரல் 2 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நடந்த உலகக் கிண்ண போட்டிகளில் இலங்கை கிரிக்கட் ஈட்டிய இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதனையும்;

(ii) பிரதான வருமான மூலங்கள் என்ன என்பதையும் சம்பாதிக்கப்பட்ட மொத்த வருமானம் எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்;

(iii) விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதில் ஏற்பட்ட செலவினங்கள் என்ன என்பதையும்;

(iv) போட்டி உரிய கேள்விப்பத்திர நடைமுறைகளை பின்பற்றியும் ஏலவிலை கோரல்களை மதிப்பீடு செய்த பின்னரும்தான் அச்செலவினங்கள் ஏற்பட்டதா என்பதனையும்;

(v) அவ்வாறு இல்லையாயின் எவ்வாறு இச்செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதனையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) உலகக் கிண்ண விளையாட்டுப் போட்டிகளுக்கு அன்பளிப்பு நுழைவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறான நுழைவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டவர்கள் யார் என்பதனையும்;

(iii) அன்பளிப்பு நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட பெறுமானம் எவ்வளவு என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1444/ '11

4.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1623/ '11

5\.

கௌரவ அனுர திசாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில்

(i) இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான துறைமுகங்களுக்கு வருகைதந்த மொத்த கப்பல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு துறைமுகத்தின்படி எவ்வளவு என்பதையும்;

(ii) ஒவ்வொரு துறைமுகத்திலும் கையாளப்பட்ட மொத்த கொள்கலன்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு துறைமுகமும் ஈட்டிய மொத்த வருமானம் மற்றும் ஒவ்வொரு வருடத்திலும் செலவு எவ்வளவென்பதையும்

அவர் தனித் தனியே குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட வருடங்களுக்காக துறைமுக அதிகார சபைக்கு கிடைத்த இலாபம் அல்லது நட்டம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) நட்டமடைந்திருப்பின் அதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1295/ '11

6\.

கௌரவ புத்திக பத்திரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் நடைமுறையிலுள்ள பெரும்பாலான குடிநீர் கருத்திட்டங்களில் நீர் மூலங்கள் முறையாக பாதுகாக்கப்படாமையினால் இவற்றில் கழிவுகள் ஒன்று சேர்கின்றன என்பதையும்;

(ii) மேற்படி நீர் வழங்கல் திட்டங்கள் பெரும்பாலானவற்றில் நீர் சுகாதாரப் பாதுகாப்பற்றதென இது பற்றி மேற்கொள்ளப்பட்ட இரசாயன பரிசோதனைகளில் தெரியவந்துள்ளதென்பதையும்;

(iii) இந்நிலைமையானது இப்பிரதேச மக்களின் சுகாதார நிலைமையின் வீழ்ச்சிக்கு காரணமாக அமையுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மாத்தளை மாவட்டத்தில் குடிநீர் கருத்திட்டங்களில் குடிநீரின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1372/ '11

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான தோட்டங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு தோட்டத்தினதும் பெயர், அமைந்துள்ள இடம் மற்றும் பரப்பளவு தனித்தனியாக யாது;

(iii) 2000 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், மேற்படி ஒவ்வொரு தோட்டமும் பெற்ற இலாபம் அல்லது அடைந்த நட்டம் வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(iv) நட்டமடைந்திருப்பின், அவ்வாறு நட்டமடைவதற்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1382/ '11

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கிரிக்கட் குழாமிலுள்ள கிரிக்கட் வீரர்களுக்கு வருடாந்தம் செலுத்தப்படும் தொகையை 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கு தனித்தனியாக எவ்வளவு என்பதனையும்;

(ii) இக் கொடுப்பனவுகளைத் தீர்மானிக்கும் அளவுகோல் என்ன என்பதனையும்;

(iii) மேற்படி அளவுகோலை நிர்ணயிப்பதற்குப் பொறுப்பானவர் யார் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கிரிக்கட் விளையாட்டு குழுவினைத் தெரிவு செய்வதற்கு தெரிவுக் குழு முழுப் பொறுப்புடையதா என்பதையும்;

(ii) அவ்வாறு இல்லையாயின் பொறுப்பைக் வேறு யாரும் கொண்டிருக்கிறார்களா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) 2010 இலிருந்து இற்றைவரைக்கும் குழுவைத் தெரிவு செய்பவர்களின் பெயர்களையும்;

(ii) அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஏதாவது வடிவத்தில் அல்லது வழியில் அவர்களுக்குச் செலுத்தப்படும் தொகையையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1445/ '11

9\.

கௌரவ அஜித் குமார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1628/ '11

10\.

கௌரவ அனுர திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய ஆசிரியர்களில் மேல்மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட போதிலும் தற்போது வடமத்திய மாகாணத்தில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்திற்கும் அமைவாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் வட மத்திய மாகாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு தாம் வதியும் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்காக, இவர்கள் சார்பில் வேறு ஆசிரியர்களை மேற்படி மாகாணத்திற்கு அமர்த்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கஷ்டப் பிரதேச சேவையை நிறைவு செய்த மேற்கூறிய ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை கருத்திற்கொண்டு வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இதுபோன்ற கோரிக்கைகளின் அடிப்படையில் இடமாற்றங்கள் வழங்கப்படாத ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள தலையீடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1373/ '11

11.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த யுத்த காலத்தில் இராணுவ நடவடிக்கைக் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் அங்கவீனர்களான பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இவர்கள் சார்பில் சம்பளம் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அங்கவீனமுற்ற முப்படை வீரர்களுக்கு வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளும் மேற்படி உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) இன்றேல், இதற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1383/ '11

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஏற்பட்ட,

(i) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) ஐந்தொகையுடன் இறுதி வரவு செலவுக் கணக்கு எவ்வளவு என்பதையும்;

தனித்தனியாக அவர் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான காசுப்பாய்ச்சல் எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் சொத்துக்கள் என்ன என்பதையும்;

(iii) இலங்கை நாணயப் படி ஒரு மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட செலவை ஏற்படுத்திய மைதானங்கள் அல்லது ஏனைய விடயங்கள் எவை என்பதையும்;

(iv) மேற்படி செலவினங்களை தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களின் பெயர்களை தனித்தனியாகவும்;

(ii) 2010 மற்றும் 2011 முதல் இற்றைவரை பணியாளர்களுக்கான கொடுப்பனவிற்காக ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1446/ '11

13.

கௌரவ அஜித் குமார,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1630/ '11

14.

கௌரவ அனுர திஸாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபைக்கு குத்தகை அடிப்படையில் கொடுப்பனவுகளைச் செய்யும் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட பஸ்வண்டிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பஸ் வண்டிகள் வரவழைக்கப்பட்ட திகதிகள் மற்றும், அந்த ஒவ்வொரு திகதியிலும் வரவழைப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வரவழைக்கப்பட்ட ஒரு பஸ் வண்டியின் விலை எவ்வளவு என்பதையும்;

(ii) மாதாந்தம் ஒரு பஸ் வண்டிக்கு செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குத்தகை அடிப்படையில் பஸ் வண்டிகளை கொள்வனவு செய்கின்ற போது கேள்விப் பத்திர நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2012) — (ஒதுக்கப்பட்ட இரண்டாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, நவெம்பர் 21) [1].

பா. 145/ '11

2.

கௌரவ மைத்திரிபால சிறிசேன

கௌரவ வாசுதேவ நாணயக்கார

கௌரவ டியு குணசேகர

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ பெசில் ரோஹண ராஜபக்ஷ

கௌரவ ஆறுமுகன் தொண்டமான்

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ பொ. பியசேன

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்

கௌரவ ராஜீவ விஜேசிங்க

கௌரவ அனுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ றஊப் ஹகீம்

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— இலங்கை மக்களுக்கு ஒரே தேச மக்களாக வாழ்வதற்கு தத்துவமளிப்பதற்கான அரசியல் மற்றும் அரசியலமைப்பு நடவடிக்கைகளை பற்றி விதந்துரைத்து அறிக்கை செய்வதற்கான பாராளுமன்ற தெரிகுழு,—

எல்லா மக்களும் தமது தனித்துவங்களைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் அத்துடன் கண்ணியமாகவும் பாதுகாப்பாகவும் ஒரு தேச மக்களாக வாழ்வதையும் உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்புச் சட்டகமொன்றை வகுக்க வேண்டியது தற்போது அவசியமாகவுள்ளதாலும்;

அத்துடன் அத்தகைய ஐக்கியம் எல்லா மக்களினதும் நாட்டினதும் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார அபிவிருத்தியை மேம்படுத்தும் என்பதாலும்;

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் தெரிகுழுவொன்று மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் குழுவாக இருப்பதனால், மேலே சொல்லப்பட்டதை இயலச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளின் செயற்பரப்பை நிர்ணயிப்பதற்கு மிகவும் பொருத்தமாக இருப்பதாலும்

(அ) எல்லா மக்களும் தமது தனித்துவங்களைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் அத்துடன் கண்ணியமாகவும் பாதுகாப்பாகவும் ஒரு தேச மக்களாக வாழ்வதையும் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஆ) இலங்கை மக்களின் ஐக்கியத்தை மேம்படுத்துவதற்கும்; மற்றும்

(இ) சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்கு மக்களுக்கும் நாட்டுக்கும் தத்துவமளிப்பதற்கும்

தகுந்த அரசியல் மற்றும் அரசியலமைப்பு நடவடிக்கைகளை ஆறு மாதங்களினுள் விதந்துரைப்பதற்கு பாராளுமன்ற தெரிகுழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) மேற்படி தெரிகுழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறிக்கப்படல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறாயிருப்பினும், அக்குழு முப்பத்தொன்றுக்கு (31) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. மேற்படி பாராளுமன்றத் தெரிகுழுவானது,

(அ) அதன் கூட்டநடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) அது அவசியமெனக் கருதும் எவரேனும் அத்தகைய ஆளை அல்லது ஆவணங்களை வரவழைப்பதற்கும்;

(இ) அவ்வாறு வரவழைக்கப்படும் எவரையும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிமொழியின் பேரில் விசாரணை செய்வதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணைபுரியும் பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுனர்களினதும் நிபுணர்களினதும் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(உ) காலத்திற்குக் காலம் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுவதனால் தடைப்படாது தொடர்வதற்கும்; மற்றும்

(ஊ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும்;

இப்பாராளுமன்ற தெரிகுழு அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

* 3.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

நாடு, நகரத் திட்டமிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 5.

இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்,— இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் உட்பிரிவு (2), 17 ஆம் பிரிவின் உட்பிரிவு (2) பந்தி (அ), மற்றும் 18 ஆம் பிரிவின் உட்பிரிவின் (2) பந்தி (அ) இன் கீழ் மின்வலு, மின்சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே மாதம் 10 ஆம் திகதிய 1705/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிப்படுமாக.

* 9.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்,— இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி (இல.2),— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 36 ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, மின்சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 யூலை மாதம் 20 ஆம் திகதிய 1715/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிப்படுமாக.

* 10.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 12.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

24.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

25.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரீசலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.